**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண். OS 109 of 2015**

2021ம் ஆண்டு திங்கள் ம் நாள் வாதியின்/பிரதிவாதியின் மனுதாரரின்/எதிர்மனுதாரரின் DW3 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.G. சிவகாமி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் போதும்பொண்ணு | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)**

**10.11.2021**

நான் 65 செண்ட் நிலத்தினை 28/10/2010ம் தேதியில் கதிரேசன், சீதாமணியிடம் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். சர்வே எண்.27/16ல் மொத்த செண்ட் 74 என்றால் சரிதான். 74 செண்டில் 9 செண்ட் கரிசல்குளம் சாலைக்கு எடுத்துகொள்ளப்பட்டது என்றால் சரிதான். 15வது இலக்க சொத்தின் கதவு எண் தெரியாது, நான் தான் குடியிருந்து வருகிறேன். 15வது இலக்க சொத்தின் வடபுறம் 32½ செண்டு எனக்கு தனித்து பாத்தியம் என்று அருப்புக்கோட்டை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு

தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். அந்த வழக்கு எனக்கு சாதகமாக தீர்ப்பாகிவிட்டது. மேற்படி 15வது இலக்க சொத்தின் தென்புறம் 32½ செண்டிற்கு வேறொரு வழக்கு திருச்சுழி உரிமையியல் நீதிமன்றத்தில் ஓ.எஸ்.43/2021 நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். 15வது இலக்க சொத்தை பொறுத்து 3 மற்றும் 4 பிரதிவாதிக்களுக்கு சம்மந்தம் உள்ளதா என்றால் இல்லை. 15வது இலக்க சொத்து எனக்கு மட்டுமே பாத்தியம்.